மே - 16

# தேசியச் செய்திகள்

## தோல்கா தேர்தல் குறித்த தீர்ப்பு

- 2017 ஆம் ஆண்டில் தோல்கா தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக கட்சியின் அமைச்சரான பூபேந்திரசின்ஹ் சுடசாமாவின் தேர்தல் வெற்றியை "முறைகேடு மற்றும் மோசடி செய்தல்" என்பதின் அடிப்படையில் செல்லாது என்று குஜராத் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது தோல்கா சட்டமன்றத் தொகுதி தொடர்பான தேர்தல் மனு மீதான குஜராத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக உமேஷ் சின்ஹாவின் தலைமையில் 3 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

## தற்சார்பு மீதான பிரதமரின் அறிவிப்புகள்

- இந்தியப் பிரதமர் 21 ஆம் நூற்றாண்டில் உலகத்தை வழி நடத்தவிருக்கும் தற்சார்பு இந்தியாவின் 5 தூண்களை அறிவித்துள்ளார்.
- பொருளாதாரமானது கூடுதல் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மிகப்பெரிய ஒரு வளர்ச்சியையும் கொண்டு வர இருக்கின்றது.
- கட்டமைப்பு வளர்ச்சியானது நவீன இந்தியாவின் அடையாளமாக இருக்கின்றது.
- அடிப்படை அமைப்பானது கடந்த நூற்றாண்டின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதோடு மட்டுமல்லாமல், 21 ஆம் நூற்றாண்டின் கனவுகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் தொழில்நுட்பத்தால் செயல்படக் கூடியதாகவும் உள்ளது.
- இந்தியாவின் மக்கள் தொகையானது நமது வலிமையாகவும் தற்சார்பு இந்தியாவிற்கான ஒரு ஆற்றல் மூலாதாரமாகவும் இருக்கின்றது.
- தேவை : விநியோகச் சங்கிலி மற்றும் அதற்கான தேவையானது பொருளாதாரத்தை வளர்ச்சி பெறச் செய்ய இருக்கின்றது. இது அதன் முழுத் திறனையும் அடைவதற்கான வலிமையை வழங்க இருக்கின்றது.




## ஆத்ம நிர்பர் பாரத் அபியான்

- இந்தியப் பிரதமர் மோடி தற்சார்பு இந்தியா என்ற நிலையை அடைவதற்காக ரூ.20 இலட்சம் கோடி மதிப்பிலான ஒரு சிறப்புப் பொருளாதாரத் தொகுப்பினை அறிவித்துள்ளார்.
- இந்தப் பொருளாதாரத் தொகுப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% ஆக உள்ளது.
- இந்தப் புதிய பொருளாதாரத் தொகுப்பானது பொது முடக்கத்தின் காரணமாக மிகவும் பாதிப்படைந்த தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், விவசாயிகள் மற்றும் தொழிற்துறையினருக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்தப் பொருளாதாரத் தொகுப்பானது நிலம், தொழிலாளர், நிதிப் புழக்கம், சட்டம் மற்றும் உள்ளூர்த் தன்மை ஆகிய உற்பத்தி விநியோகச் சங்கிலியின் 5 முக்கியமான நிலைகளின் மீதான விவகாரங்களைக் களைய இருக்கின்றது.
- இந்தத் பொருளாதாரத் தொகுப்பானது உள்நாட்டு விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப் படும் பொருட்களை நுகர்வதை ஊக்கப்படுத்தவும் பயன்பட இருக்கின்றது.
- இந்தப் புதிய திட்டத்தின் கீழ் மத்திய நிதித்துறை அமைச்சர் 15 பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.
- இந்தத் திட்டமானது உள்நாட்டுப் பொருள்களுக்கான நுகர்வு என்பதின் மீதும்

கவனம் செலுத்த இருக்கின்றது.

***சிறப்பம்சங்கள்***

- மத்திய அரசானது முதலீடுகளின் வரம்பை அதிகப்படுத்தியதன் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளின் (MSME - Micro Small Medium Enterprises) வரையறையை மாற்றியமைத்துள்ளது.
- மேலும் இதற்கு முன்பு முதலீடுகள் மட்டுமே MSMEகளை வரையறுக்கப் பயன்படுத்தப் பட்டன.
- தற்போது மாற்றியமைக்கப்பட்ட திருத்தத்தின் மூலம் முதலீடுகள் மற்றும் விற்றுமுதல் ஆகிய இரண்டும் MSMEகளை வரையறுக்கப் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- ஒரு நிறுவனம் MSME வகையின் கீழ் வர வேண்டும் என்றால் அந்நிறுவனம் முதலீடு மற்றும் விற்றுமுதல் ஆகிய 2 நிபந்தனையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- மேலும், தற்போது புதிய வரையறையின்படி, உற்பத்தி மற்றும் சேவை என்பதை அடிப்படையாகக் கொண்ட MSME நிறுவனங்களுக்கான வகையீடானது நீக்கப் பட்டுள்ளது.

**Existing and Revised Definition of MSMEs**

Government Of India

| Existing MSME Classification | | | |
|---|---|---|---|
| Criteria : Investment in Plant & Machinery or Equipment | | | |
| Classification | Micro | Small | Medium |
| Mfg. Enterprises | Investment<Rs. 25 lac | Investment<Rs. 5 cr. | Investment <Rs. 10 cr. |
| Services Enterprise | Investment<Rs. 10 lac | Investment< Rs. 2 cr. | Investment<Rs. 5 cr. |

| Revised MSME Classification | | | |
|---|---|---|---|
| Composite Criteria : Investment And Annual Turnover | | | |
| Classification | Micro | Small | Medium |
| Manufacturing & Services | Investment< Rs. 1 cr. and Turnover < Rs.5 cr. | Investment< Rs. 10 cr. and Turnover < Rs.50 cr. | Investment< Rs. 20 cr. and Turnover < Rs.100 cr. |

- MSME துறைக்காக பிணைத் தொகை அற்ற வகையில் ரூ. 3 இலட்சம் கோடி கடன் தொகையானது (Collateral free) ஒதுக்கப் பட்டுள்ளது.
- இந்த வசதியானது ரூ. 25 கோடியிலான செலுத்தப்படாத கடன்களைக் கொண்ட நிறுவனங்கள் அல்லது ரூ.100 கோடியை வருடாந்திர விற்று முதலாகக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கும் சேர்த்து நீட்டிக்கப் பட்டுள்ளது.
- அசல் தொகை மீதான கடன் நிறுத்தி வைப்புக் காலமாக 12 மாதங்களுடன் சேர்த்து கடன் திருப்பிச் செலுத்தும் காலம் 4 ஆண்டுகளாக உள்ளது.

- வட்டித் தொகையானது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டதாக இருக்கும்.
- இக்கடன்களுக்கு எந்தவொரு உத்தரவாதக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், 100% கடன் உத்தரவாதப் பிணையானது வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு அசல் மற்றும் வட்டி ஆகிய இரண்டின் மீதும் வழங்கப்படும்.
- ரூ. 200 கோடி வரையிலான அரசாங்க ஒப்பந்தங்களுக்கு (அரசு கொள்முதல்) இனிமேல் உலகளாவிய ஒப்பந்ததாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மூலாதாரத்திலிருந்து வரிப் பிடித்தம் மற்றும் மூலாதாரத்திலிருந்து வரி வசூல் ஆகிய விகிதங்கள் 25% என்ற அளவில் குறைக்கப்பட உள்ளன.
- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தொடரும்.
- விவாத் சே விஸ்வாஸ் என்ற திட்டத்தின் கால வரம்பானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- தற்பொழுது தொழிலாளர் வைப்பு நிதித் திட்டத்தின் கீழ், பங்களிப்பானது 12% தொழிலாளியினாலும் 12% ஆனது முதலாளியினாலும் பங்களிக்கப் படுகின்றது.
- அடுத்த 3 மாதங்களுக்கு, தனியார் நிறுவன முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் 10% மட்டுமே செலுத்த வேண்டும்.

## சொஹ்ராய் கோவர் ஓவியம்

- சமீபத்தில் ஜார்க்கண்ட்டின் சொஹ்ராய் கோவர் ஓவியம் மற்றும் தெலுங்கானாவின் டெலியா ரூமல் ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- சொஹ்ராய் கோவர் ஓவியமானது பாரம்பரிய மற்றும் மரபுகளைக் கொண்ட சுவர் சித்திரக் கலையாகும்.
- சுவர் சித்திரம் என்பது ஓவியக் கலைப் பணியின் எந்தவொரு வேலைப்பாடும் நேரடியாகச் சுவற்றின் மீதோ, கூரையின் மீதோ அல்லது நிரந்தர மேற்பரப்பின் மீதோ பொருத்தப் படுவதாகும்.
- டெலியா ரூமல் கைத்தறிக் கலையானது இயற்கைப் பழச் சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் இகாத் பாரம்பரியக் கலையைக் கொண்டுள்ளது.
- இகாத் என்பது ஜவுளிகளை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகை சாயம் பூசும் முறையாகும்.
- டெலியா ரூமல்கள் அப்போதைய ஹைதராபாத் நிசாமின் அரசவையில் இருந்த இளவரசிகளினால் முகத்திரையாகவும் மத்திய ஆசியாவில் அராபியர்களினால் தலைப்பாகைத் துணியாகவும் அணியப்பட்டன.




# சர்வதேசச் செய்திகள்

## உலக சுகாதார அமைப்பின் தலைமை

- ஜப்பானின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் உலக சுகாதார அமைப்பின் (WHO - World Health Organization) தலைமைப் பதவியை இந்தியா ஏற்க இருக்கின்றது.
- இந்தியா இப்பதவியை அடுத்த 3 ஆண்டுகளுக்கு வகிக்க இருக்கின்றது.

## பார்வையாளர் நாடாக தைவான்


- அமெரிக்க செனட் சபையானது உலக சுகாதார அமைப்பில் (WHO -World Health Organization) தைவானைப் பார்வையாளர் நாடாக ஆக்கும் வகையில் சட்டம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
- இது தொடர்பாக, இதற்கான ஆதரவைப் பெறுவதற்காக ஆஸ்திரேலியா, இந்தியா, பிரேசில், ஜப்பான், இஸ்ரேல் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளுக்கிடையே ஒரு மாநாடு நடத்தப் பட்டது.
- இந்த மாநாட்டில் இந்தியாவும் கலந்து கொண்டது.
- தற்பொழுது தைவான் சீனக் குடியரசினால் ஆளப் படுகின்றது.
- எனினும், சீனா தனது “ஒற்றை சீனா என்ற கொள்கையின்” கீழ் தைவானை தன்னுடன் இணைக்கப்பட்ட ஒரு பகுதியாக உரிமை கோருகின்றது.
- மறுபுறம் தைவான் மக்கள் தனி நாடு கோருகின்றனர்.




# பொருளாதாரச் செய்திகள்

## PM CARES நிதி


- கோவிட் - 19 நோய்த் தொற்றிற்காக PM CARES நிதியிலிருந்து ரூ.3100 கோடியானது ஒதுக்கப் பட்டுள்ளது.
- இது பிரதமரால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இதன் மற்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோராவர்.
- இந்தியாவின் தலைமைக் கணக்குப் பதிவாளர் இந்த நிதியைத் தணிக்கை செய்ய அனுமதிக்கப் படுவதில்லை.
- தணிக்கை நோக்கத்திற்காக இந்த அறக்கட்டளை உறுப்பினர்களால் தனிச்சுதந்திர தணிக்கையாளர்கள் அதற்கு நியமிக்கப் படுகின்றனர்.
- இந்த நிதியானது நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப் படுகின்றது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய ஆற்றல் மாற்றக் குறியீடு (GET Index - Global Energy Transition Index)

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF - World Economic Forum) "WEF வளரும் திறன்மிகு ஆற்றல் மாற்றம் 2020" என்ற பெயருடன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 75% நாடுகள் தங்களது சுற்றுச்சூழல் நிலைப்புத் தன்மையை மேம்படுத்தியுள்ளன.
- இந்தியா இந்தக் குறியீட்டில் 74வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சுவீடன் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- இதற்கு அடுத்து சுவிட்சர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இதன் முதல் 10 இடங்களில் G20 அமைப்பைச் சேர்ந்த பிரான்சு (8வது இடம்) மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் (7வது இடம்) ஆகிய நாடுகள் மட்டுமே இடம் பிடித்துள்ளன.
- முதன்முறையாக, அமெரிக்கா, முதல் 25 இடங்களில் இடம் பெறவில்லை.
- இந்தத் தரவரிசையின் படி, உலகில் ஆற்றல் தேவையுள்ள வளரும் நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன.


Energy Transition Index 2020
Top 10 countries
WORLD ECONOMIC FORUM
ETI Ranking
Sweden 74.2% 1
Switzerland 73.4% 2
Finland 72.4% 3
Denmark 72.2% 4
Norway 72.2% 5
Austria 70.5% 6
United Kingdom 69.9% 7
France 68.7% 8
Netherlands 68.0% 9
Iceland 67.3% 10